## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.73/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 (LW3) |
| Name : | செல்வராஜ் |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி ராமர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மாமா ஆவார். பட்டியல் சாட்சி மணிகண்டன் எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் ஆவார். ராஜேந்திரன் கிராம உதவியாளர் ஆவார். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு எனது மாமா எங்கள் ஊர் ஆற்றிலிருந்து மாட்டுவண்டியில் மணல் ஏற்றிக்கொண்டு செல்லும்போது அவரை எங்கள் ஊர் விஏஓ பிடித்தார். நான் உடனிருந்தேன்.அது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர். மாட்டுவண்டியை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(i) எனது மாமா ஆஜர் எதிரி ராமர் மாட்டுவண்டியில் மணல் எடுத்து சென்றதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் இவ்வழக்கில் என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை :** முதல் விசாணையில் கூறிய சங்கதிகளை குறுக்கு விசாரணயில் எதிரி எனது மாமா என்பதால் உண்மை சங்கதிகளை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.73/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 (LW 4) |
| Name : | நடராஜன் |
| Father's/Husband Name: | செல்லக்கண்ணு |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி ராமர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு படிப்பறிவில்லை. கையெழுத்து மட்டும் போட தெரியும். என்னிடம் காட்டப்டும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னுடன் சுப்பிரமணியன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 3 வருங்களுக்கு முன்பு எங்கள் ஊர் பள்ளி அருகே உள்ள ஆற்றில் மணல் எடுத்தது தொடர்பாக கை.களத்தூர் போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். அதற்காக அங்கு வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் (அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) நீங்கள் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தீர்கள் என்றாலும் உங்களுக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றாலும் சரிதான்.

**நீங்கள் கையொப்பமிட்ட பார்வை மகஜரில் என்ன விவரம் இருக்கிறது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.**

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.73/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 (LW 5) |
| Name : | **சுப்பிரமணி** |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி ராமர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு படிப்பறிவில்லை. கையெழுத்து மட்டும் போட தெரியும். என்னிடம் காட்டப்டும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னுடன் நடராஜன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 3 வருங்களுக்கு முன்பு எங்கள் ஊர் பள்ளி அருகே உள்ள ஆற்றில் மணல் எடுத்தது தொடர்பாக கை.களத்தூர் போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். அதற்காக அங்கு வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் (அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) நீங்கள் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தீர்கள் என்றாலும் உங்களுக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றாலும் சரிதான்.

நீங்கள் கையொப்பமிட்ட பார்வை மகஜரில் என்ன விவரம் இருக்கிறது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate